## டாக்டர் மகாலிங்கம் பொறியியல் தொழில்நுட்பக் கல்லூரி, பொள்ளாச்சி
## நாட்டு நலப்பணித் திட்டம்
## முகாம் அறிக்கை - 2012-2013

அண்ணா பல்கலைக்கழகம் சென்னை மற்றும் டாக்டர் மகாலிங்கம் பொறியியல் தொழில்நுட்பக் கல்லூரி நாட்டு நலப்பணித் திட்ட சிறப்பு முகாம் நெகமம் மற்றும் காளியப்பம் பாளையம் 30.01.2013 முதல் 05.02.2013 வரை நடத்தப்பட்டது.



முகாமின் துவக்க விழா 30.1.2013 அன்று மாலை 3 மணி அளவில் பழைய பேருந்து நிலையத்தில் கல்லூரி முதல்வர் முனைவர் எஸ். செந்தூர் பாண்டியன் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது. துவக்க விழாவில் திரு K.V.P. சோமசுந்தரம், தலைவர், நெகமம் பேரூராட்சி, திரு. S. பார்த்தசாரதி , துணைத் தலைவர், நெகமம் பேரூராட்சி, திருமதி S. ராஜாத்தி , தலைமை ஆசிரியர், ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி, நெகமம் ஆகியோர் சிறப்புரை ஆற்ற விழா இனிதே துவக்கப்பட்டது.

இரண்டாம் நாள் 31.1.13 வியாழக்கிழமை அன்று சோலார் மூலம் தேங்காய் உலர்கலன் விழிப்புணர்வு நிகழ்ச்சி திருமதி மனோன்மணி மற்றும் திரு. வேலுமணி, உறுப்பினர்கள், நெகமம் பேரூராட்சி அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது. அன்றைய தினம் காலை 11.00 மணியளவில் அரசு மேல்நிலைப்பள்ளி மாணவர்களுக்கு நுகர்வோர் உரிமை குறித்து வினாடி வினா நிகழ்ச்சி நடத்தப்பட்டு வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசும் வழங்கப்பட்டது.



அன்றைய தினம் மாலை ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி வளாத்தில் ஊர் பொதுமக்களுக்கு நுகர்வோர் விழிப்புணர்வு பற்றிய குறும்படம் திரையிடப்பட்டது. மக்கள் திரளாக வந்து நிகழ்ச்சியை பயன்படுத்திக் கொண்டனர். மாலை கலை நிகழ்ச்சிகளுடன் அன்றைய நிகழ்ச்சிகள் இனிதே நிறைவடைந்தது.



மூன்றாம் நாள் 1.2.13 வெள்ளிக்கிழமை அன்று அரசுபெண்கள் உயர்நிலைப்பள்ளி மற்றும் அரசு மேல்நிலைப் பள்ளிகளில் மாணவர்களுக்கு கணிணி அறிவும் என்ன படிப்பது? என்பது பற்றியும் ஆங்கிலத்தில் சரளமாக பேசுவதற்கான வழிமுறைகள் பற்றியும் தொழில்நுட்பக் கல்லூரிகளில் உள்ள பாடப்பிரிவுகளை பற்றியும் வேலைவாய்ப்புகளை பற்றியும் எடுத்துரைக்கப்பட்டது. இந்நிகழ்ச்சி மாணவர்கள் மத்தியில் நல்லதொரு விழிப்புணர்வை ஏற்படுத்தியது. அன்றைய தினம் நமது கல்லூரியின் நாட்டுநலப்பணித் திட்ட இரத்த தானம், கண் தானம் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்த ஊர் முழுவதும் பேரணி நடத்தப்பட்டது. அன்று மதியம் கண் தானம் மற்றும் இரத்த தானம் செய்வது பற்றிய விளக்க உரை வழங்கப்பட்டது. மாலை கலை நிகழ்ச்சிகளுடன் 3 ம் நாள் நிகழ்ச்சிகள் நிறைவு பெற்றது.







நான்காம் நாள் 2.2.13 சனிக்கிழமை அன்று காலை 9.00 மணி முதல் பொது மருத்துவ முகாம் நடத்தப்பட்டது. இதில் டாக்டர் தங்கவேல் மருத்துவ அலுவலர் என்.ஐ.ஏ. கல்வி நிறுவனங்கள் மற்றும் டாக்டர் வி.எம். காஜா மொகைதீன் மருத்துவமனை, பொள்ளாச்சி ஆகியோர் கொண்ட மருத்துவக் குழுவினால் நடத்தப்பட்டது. இந்த முகாமில் 171 பொது மக்கள் கலந்து கொண்டு மருத்துவ ஆலோசனைகளை பெற்று இலவசமாக மருந்துகளும் பெற்றுச் சென்றனர். அன்றைய தினம் மதியம் 2 மணி அளவில் கிராம மக்களுக்கான தையல் பயிற்சி நடத்தப்பட்டது. மாலை 3 மணி முதல் கிராமத்தை சுற்றியுள்ள பகுதிகளில் சுற்றுச்சூழலை மாசுபடுத்தும் பிளாஸ்டிக் பொருட்களை மாணவர்கள் அகற்றினர். மாலை கலை நிகழ்ச்சிகளுடன் அன்றைய தினம் நிறைவடைந்தது.







ஐந்தாம் நாள் 3.2.13 ஞாயிற்றுக் கிழமை அன்று டெங்கு காய்ச்சல் பற்றி ஒரு விழிப்புணர்வு கருத்தரங்கு திரு. சிதம்பரம், சுகாதார ஆய்வாளர் ( ஓய்வு ) இராசக்காபாளையம் அவர்களால் NSS மாணவர்களுக்கு வழங்கப்பட்டது. திரு. பாலமுருகன், உறுப்பினர், நெகமம் பேரூராட்சி அவர்கள் முன்னிலையில் இந்நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியை தொடர்ந்து ஊர்மக்களுக்கு டெங்கு காய்ச்சல் பரவுவது பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தவும் பிளாஸ்டிக் பைகளால் ஏற்படும் சுற்றுச் சூழல் பாதிப்புகளைப் பற்றி விளக்கவும் ஒரு மிகப்பெரிய பேரணி நெகமம் மற்றும் காளியப்பம்பாளையம் பகுதிகளில் திரு. சிதம்பரம் ஐயா அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மதியம் ABT பழைய பேருந்து நிலைய வளாகத்தை NSS மாணவர்கள் சுத்தம் செய்தனர்.



ஆறாம் நாள் 4.2.13 திங்கட்கிழமை அன்று காலை ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி மாணவர்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கும், விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டது. இரண்டாம் நிகழ்ச்சியாக கிராமப்புற மகளிர்க்கான தொழில்நுட்ப பயிற்சிகள் , கைவினைப் பொருட்கள், கிளாஸ் பெயிண்டிங் போன்ற நிகழ்ச்சிகளுக்கான செய்முறை விளக்கம் திருமதி N. சகுந்தலா, அச்சுத்துறை, நாச்சிமுத்து பாலிடெக்னிக் கல்லூரி அவர்களால் நடத்தப்பட்டது. மேலும் NSS மாணவர்கள் , அரசு பெண்கள்



உயர்நிலைப்பள்ளி மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் முன்னேறும் வழிமுறைகள் ஊக்கப்படுத்துவது மற்றும் ஒழுக்கமுறை பற்றி மாணவர்களுக்கு சொல்லித் தரப்பட்டது. அன்று மாலை கலை நிகழ்ச்சிகளுடன் அன்றைய நாள் நிகழ்ச்சிகள் இனிதே நிறைவு பெற்றது.



முகாம் நிறைவு விழாவாக 5.2.13 செவ்வாய்கிழமை முனைவர் R. பழனிசாமி, டீன், கட்டிடவியல் துறை அவர்கள் தலைமையில் நடைபெற்றது. விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற பள்ளி மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. இந்த ஏழு நாள் முகாமில் அனைத்து நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டு எங்களை ஊக்குவித்த பேரூராட்சி தலைவர், உபதலைவர், உறுப்பினர்கள் மற்றும் ஊர் பொதுமக்களுக்கும், பள்ளி ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கும் எங்களது நன்றி கலந்த வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறோம்.

நாட்டுநலப்பணித் திட்ட அலுவலர்கள் முதல்வர்